**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.102/2024** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | செந்தில் குமார் |
| Father’s /Husband Name | : | கணேசன் |
| Village | : | மணக்கால் அய்யம்பேட்டை |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 49 |
| Occupation | : | தனியார் ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of June 2025.
Accused produced from Judicial Custody.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மணக்கால் அய்யம்பேட்டை குமரக்கோயில் தெருவில் குடியிருந்து தனியார் ஊழியராக வேலை செய்து வருகிறேன். எங்கள் தெருவில் வசித்து வந்த தலைமைஆசிரியர் சாமிநாதன்தற்போது இறந்துவிட்டார். 16.10.2022 ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் வீட்டை பூட்டி விட்டு சாமிநாதனும் அவரது மனைவியும் அவரது மகள் வசிக்கும் பாபநாசத்திற்கு சென்றார்கள். 17.10.2022 ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் சாமிநாதன் வீட்டை பார்த்த போது வாசலில் பூட்டப்பட்டிருந்த பூட்டுகள் உடைக்கப்பட்டு இரண்டு கதவுகளும் திறந்து கிடந்தது. இது சம்மந்தமாக சாமிநாதனுக்கு தகவல் கூறினேன். சாமிநாதன் வீட்டை பார்த்துவிட்டு வீட்டுக்குள் சென்று 40 கிராம் தங்கக்கட்டி மற்றும் நகைகளையும் காணவில்லை என்று கூறினார். இது சம்மந்தமாக கண்டுபிடித்து தரவேண்டி குடவாசல் காவல் நிலையத்தில் சாமிநாதன் புகார் கொடுத்தார். சாட்சி சாமிநாதன்

கொடுத்த புகாரில் குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் எண்கண் கிராமத்தை சேர்ந்த நபர் தான் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறினார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் சம்பவத்தை நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக எத்தனை போலீசார் விசாரித்தார்கள் என்றால் நான்கு போலீசாருடன் வந்து விசாரித்தார்கள். சாட்சி சாமிநாதன் என்னுடைய ஆசிரியர் என்பதால் அவர்கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.06.20 12:36:40 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`